**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8069018

1. District மாவட்டம் : திருச்சி மாவட்டம் | PS காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year ஆண்டு: 2023 | FIR No. மு.த.அ. எண்: 10 | Date நாள்: 24.07.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: Act 1988 (as amended in 2018) — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல்: 24.07.2023 — Date to நாள் வரை: 10.30 hrs
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 24.07.2023 — Time : நேரம்: 16.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம் (கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 30km மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி: கிராம நிர்வாக அலுவலகம், கண்ணூத்து கிராமம், மருங்காபுரி (Tk) திருச்சி Dt.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: ஞா. பார்த்திபன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: ஞானவன்
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 30.05.1954
   (d) Nationality : நாட்டினம்: இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில்: விவசாயம்
   (g) Address : முகவரி: 3/140, கண்ணூத்து கிராமம், மருங்காபுரி (Tk), திருச்சி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. சாமிநாதன், கிராம நிர்வாக அலுவலர், கிராம நிர்வாக அலுவலகம், கண்ணூத்து கிராமம், திருச்சி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தாமதம் இல்லை —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24.07.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 24.07.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் F. [illegible]
Rank: நிலை காவல் ஆய்வாளர், No எண் உ.த.பு. பிரிவு திருச்சி.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2023-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 24.07.2023 பணியில் இருந்த போது மாலை 16.30 மணியளவில் திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுகா, கண்ணூத்து கிராமத்தை சேர்ந்த ராகவன் மகன் பார்த்திபன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுகா, கண்ணூத்து கிராம நிர்வாக அலுவலர் திரு.அமீர்கான் மற்றும் புகார்தாரர் திரு.பார்த்திபன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 24.07.2023 மாலை 18.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.10/2023 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் பார்த்திபன், த/பெ. ராகவன், 3/140, கண்ணூத்து கிராமம், மருங்காபுரி தாலுகா, திருச்சி. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், திருச்சி. அய்யா, நான், மேற்கண்ட முகவரியில் தாய் தந்தையுடன் வசித்து வருகிறேன். நான் BE வரையில் படித்துள்ளேன். எனது பெயரில் சொந்தமாக TN 47 AD 9409 என்ற JCB வாகனத்தினை திருச்சி, சோழமண்டலம் பைனான்ஸ் மூலம் கடன் பெற்றும், மேற்கொண்டு நான் வைத்திருந்த பணத்தினை கொண்டும் விலைக்கு வாங்கி அதனை வாடகைக்கு விடும் தொழில் செய்து வந்தேன். எனது நண்பர் மூலம் அறிமுகமான விராலிமலையை சேர்ந்த திரு.ரெங்கசாமி என்பவரிடம் 2021 ஆகஸ்ட் மாதம் வாடகைக்கு விட்டேன். அவர் எனது வண்டியை அவருக்கு தெரிந்த 2 நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என கேள்விப்பட்டு, ரெங்கசாமியை தொடர்பு கொண்டபோது அவரது செல்போன் ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. நான் நேரில் சென்று பார்த்த போது அவர் ஊரில் இல்லை அக்கம்பக்கம் உள்ளவர்களிடம் கேட்ட போது எனது வாகனத்தினை வேறு ஒரு நபருக்கு விற்றுவிட்டதாக கேள்விபட்டு புத்தாநத்தம் காவல் நிலையத்தில் ரெங்கசாமி மற்றும் அவரது நண்பர்கள் மீது 19.03.2022 புகார் கொடுத்தேன். அதன் பேரில் புத்தாநத்தம் காவல் நிலைய கு.எண்.44/2022 ன்படி வழக்கு பதிவு செய்து எனது வாகனத்தினை 2022 டிசம்பர் மாத இறுதியில் கண்டுபிடித்து வாகனத்தினை மணப்பாறை நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். மணப்பாறை நீதிமன்றத்தில் மேற்படி வாகனத்தினை என்னிடம் ஒப்படைக்க கேட்டபோது, அதை மறுத்துவிட்டனர். எனது JCB மணப்பாறை கோர்ட்டிலேயே உள்ளது. அதனால், நான் மதுரை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த போது உயர்நீதிமன்றம் இரண்டு நபர்களிடம் ஐந்து இலட்ச சொத்துமதிப்பிற்கான surety சான்று பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்து வாகனத்தினை பெற்றுக்கொள்ள உத்தரவு பிறப்பித்தார். அதன்படி மேற்படி சொத்து மதிப்புள்ள இரண்டு நபர்களை அழைத்து கொண்டு மருங்காபுரி தாலுகா ஆபிஸில்

இரண்டு நபர்களின் சொத்து மதிப்பு குறித்த ஆவணங்களுடன் 06.07.2023 அன்று விண்ணப்பம் செய்தோம். மேற்படி விண்ணப்பமானது கண்ணூத்து கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தாலுகா ஆபீஸில் சொன்னதால் நான், 10.07.2023 அன்று எங்கள் ஊர் வி.ஏ.ஓ திரு.அமீர்கான் என்பவரை சென்று பார்த்து விண்ணப்பம் குறித்து அவரிடம் கேட்ட போது இன்னும் எனது கைக்கு வரவில்லை, கைக்கு கிடைத்த பின், கூப்பிடுவதாக சொல்லி அனுப்பினார். பின்பு 17.07.2023 அன்று மருங்காபுரி RIஐ பார்த்த போது இன்னைக்குதான் உங்க விண்ணப்பம் கிடைச்சது, உங்க ஊர் வி.ஏ.ஓவிடம் கொடுத்திடறேன், அவர் ஒரு வாரத்தில் முடிச்சி கொடுத்துடுவார் என்று கூறினார். அதன்பின்பு எங்கள் ஊர் வி.ஏ.ஓ திரு.அமீர்கானிடம் இருந்து எந்த தகவலும் வராததால், மீண்டும் நான் இன்று 24.07.2023 காலை சுமார் 10.30 மணிக்கு எங்கள் கிராம பஞ்சாயத்து ஆபிசில் இருந்த திரு.அமீர்கானை பார்த்து சூரிட்டி விண்ணப்பம் தொடர்பாக கேட்ட போது அவர் என்னிடம் பொதுவா சூரிட்டி சர்டிபிகேட் கொடுக்க எட்டாயிரம் கேட்பேன், நீ தெரிஞ்ச ஆளா இருக்கறதால ஆறாயிரம் கொடுத்துடு என்று கூறினார். நான் அவரிடம் எதற்கு சார் கவர்மெண்ட் பீஸா சார் என்று கேட்டேன். பார்மாலிட்டி தெரியாத மாதிரி கேப்பிங்க பணத்தை கொடுத்துட்டு வேலைய முடிச்சிடுங்க உங்களுக்கு கம்மியாத்தான் சொல்லியிருக்கேன் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் சார் நான் ஏற்கனவே வண்டிய தொலச்சிட்டு கோர்ட் மூலமாதான் இந்த வண்டிய வாங்குறேன். ஏகப்பட்ட செலவாயிடிச்சி சார் ஏதாச்சும் பாத்து செய்யுங்க சார் என்று கூறியதற்கு சரி ஆயிரத்த கொறச்சிட்டு ஐந்தாயிரம் கொடு இல்லாட்டி உங்க பெட்டிஷன அப்படியே பெண்டிங் போட்டிருவேன் என்று கூறினார். அப்போதைக்கு நான் அவரிடம் சார் நீங்க கேட்ட பணத்தை எப்படியாவது ரெடி பண்ணிட்டு உங்கள வந்து பாக்குறேன் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, என்னிடம் லஞ்சம் கேட்ட கண்ணூத்தூ விஏஓ திரு.அமீர்கான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (R.Parthiban)24.07.2023 Submitted to the Court of Hon'ble Special Judge, Special court for the Prevention of Corruption Act-1988, Trichy. Received this report at 16.30 hrs on 24.07.2023 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.10/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 18.30 hrs on 24.07.2023. Sd.xxx (F.Xavierrani)24.07.2023 Inspector of Police, V&AC, Trichy.

24.07.2023
(F.Xavierrani)
Inspector of Police,
V&AC, Trichy.